முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1030

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.07.2022, திங்கட்கிழமை

1. அன்னதான வள்ளலே அரங்கா போற்றி
   ஆறுமுகன் என் சூட்சுமமே தேசிகா போற்றி
   மண்ணுலகை காப்பேன் என என்பால் வரம் வேண்டி
   மாதவசியாக வந்த குரு அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
   புகலுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 09 நாள், 25.07.2022 திங்கட்கிழமை)
   ஆற்றல்பட நீ வந்த நோக்கம் பூர்த்தி கொள்ள
   ஆறுமுகன் என் துணையும் என் சக்தியும் பரிபூரணமாய் உண்டுஉண்டு
3. உண்டான உந்தனை ஞானவழிகளில்
   உயர்வாக உன் தர்மத்தைக் கொண்டு
   இந்த தேசமெல்லாம் உன் அவதாரம் அறியச்செய்து
   இனிதே அறமாக ஞானமாக எல்லா சக்தியுமாக
4. ஆகவே ஆறுமுகன் யான் இறங்கி
   அன்பர்களுக்குள் அன்பாக அறமாக கருணையாக
   ஒப்புகொள்ள செய்து இனிதே
   ஓங்காரன் உன் அவதாரத்தின் நோக்கத்தை உலகறியச்செய்து
5. பிரணவ சக்தியான உன் உபதேசமே
   பிரணவ சித்திதருகின்ற மார்க்கமான உன் சன்மார்க்கமே
   இந்த உலகை ஆளவும் வெல்லவும்
   உயர்வான வழிகாட்டி ஆறுமுகன் துணைநிற்பேன்
6. நிற்கவே நித்தம் நித்தம் சூட்சும வரங்கள்
   உந்தனுக்கு சக்தியாக தந்தருள்வேன்
   அருளவே அரங்கன் நீ கரம் நீட்டி
   ஆசி தருகின்றவரும் நிலவுலகில்
7. நின் நாமஜெபத்தை சொல்லி
   ஏற்புகொண்டு உன் தர்மத்தை செய்பவர்களும்
   இந்த உலகில் பிறவாத பெரும்பேற்றை அடைந்து
   இந்த உலகத்தை ஞான ஆட்சி புரிகின்ற வல்லமை கூடி
8. கூடியே அவர்களெல்லாம் கலியுகத்திலும் ஞானிகளாகி
   குரு அரங்கன் உன்னால் அற்புதம் நிகழ்த்துவர்
   நிகழ்த்தவே என் சக்தி நிலமதில் உந்தனுக்கு பரிபூரணமாய் இருக்க
   ஜெகத்தோர் உன்னை நாடி வர சடுதி இந்த அற்புதம் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—